Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

கண்ணோட்டம்

வெளியீடு - 66 | 01 ஆகஸ்ட் 2014 | விலை ரூபா :- 10.00

### சுதந்திரமும் பீதியற்ற வாழ்வும்

# அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

**அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பகிர்ந்து கொள்வதனூடாக மக்களுக்கு வினைத்திறனுடன் சேவையாற்ற முடியும் என அதிகார மையவாத சக்திகள் எண்ணவில்லை. மாறாக தமது அதிகாரக் கடிவாளத்தை மனம் போன போக்கில் இறுக்கிக் கொள்ளவே விரும்புகின்றன.**

இலங்கையில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல் சாதாரண பெருவாரியான மக்களை மையமாகக் கொண்டதா?

அல்லது பெருமுதலாளிகளையும், இராணுவவாதிகள், அதிகாரவர்க்கம் மற்றும் குண்டர்கள், ஊழல் மற்றும் ஜனநாயக மனித உரிமை பிரக்ஞையற்ற பேர்வழிகளைக் கொண்டதா? இவை முக்கியமான கேள்விகள்.

சாதாரண மக்களின் வாழ்வை மேம்படுத்துவது தொடர்பில் நாட்டின் வளர்ச்சியில் இன, மத, சாதி, பிரதேச தடைகளையும் வர்க்க ஏற்றத் தாழ்வுகளையும் தணிப்பதில் எவ்வளவு தூரம் அக்கறை செலுத்தப்பட்டிருக்கிறது.

1930களில் இருந்து ஒரு சில நல்ல காரியங்கள் நிகழ்ந்தன.

சர்வசன வாக்குரிமை சில ஐரோப்பிய நாடுகளில் நடைமுறைக்கு வருவதற்கு முன் இலங்கையில் யதார்த்தமாகியது.

1940 களில் இலங்கையின் முக்கியமான கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தேசங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருந்தது.

1950களில் இலவசக்கல்வி, இலவச வைத்தியம் என்பன இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கையின் அரசியல் வானில் முக்கியத்துவம் பெற்றிருந்த இடதுசாரிகள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் கணிசமான செல்வாக்குடையவர்களாக இருந்தார்கள்.

இவர்களது செல்வாக்கை இல்லாதொழிப்பதற்காகவே பிரதானமாக இந்திய -பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

1956 இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது இருமொழிக் கொள்கையே இந்த நாட்டை ஒன்றாக வைத்திருக்கும் ஒருமொழிக் கொள்கை இந்த நாட்டை இரண்டாக்கும் என இலங்கையின் காலஞ்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

# காரைநகர் - தொடரும் துஷ்பிரயோகம்

காரைநகரில் 6 ம் வகுப்பில் கல்விபயிலும் 11 வயது சிறுமியும் அவரது பள்ளித் தோழியான மற்றொரு சிறுமியும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கடற்படையைச் சேர்ந்த ஒருவரே இதற்குக் காரணம் என்பதை அச் சிறுமி பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் போராட்டம் நடாத்தி தமது பெயர்களை பிரபல்யப்படுத்திக்கொள்ள நம்மூர் அரசில் தலைவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறது

சமூக அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்ளவும் ஓரிரு வாரங்களுக்கு பக்கங்களை நிரப்பவும் சில ஊடகங்களுக்கு சூடான செய்தியாகியிருக்கிறது.

அந்தச் சிறுமியின் வாழ்கை கடற்படை சிப்பாயால் சீரழிக்கப்பட்டதன் பின்னர் நம்மூர் அரசியல்வாதிகளாலும், ஊடகங்களாலும் சில நாட்கள் சீரழிக்கப்படும். இதற்குமேல் அந்தச் சிறுமியின் எதிர்கால வாழ்க்கை தொடர்பாக இவர்கள் யாரும் அக்றை காட்டப்போவதில்லை. அக்கறை செலுத்திய கடந்தகால ஆதாரம் எதுவும் கிடையாது.

கடற்படையின் பாலியல் துஸ்பிரயோகம் குறித்து அறிந்ததும் புலிகளென உறுமிய தலைவர்கள் குருநகரில் 14.04.2014 இல் கொன்சலிற்றா என்ற இளம்பெண் மாணடது தொடர்பாக பூனைகளாய் இருந்து கொண்டார்கள்.

நெடுந்தீவில்ஏ 26.11.2013 இல் டானியல் ரொக்ஸியன் கொல்லப்பட்ட போது கமலேந்திரனின் பூர்வீகத்தை தோண்டித் துருவி நீதிக்குக் குரல்கொடுத்த சிங்கங்கள் சாவகச்சேரி வைததியசாலையின் உள்ளேயே 05.07.2014 இல் அன்பழகன் என்ற இளைஞன் வெட்டிக்கொலை செய்யப்பட்ட போது வாலைச் சுருட்டிக்கொண்டார்கள்.

கடற்படையைச் சேர்ந்தவர் புரிந்த கொடுமைக்கெதிராக நீதியான விசாரணை வேண்டும், உறுதியான சட்டநடவடிக்கை வேண்டும், காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நியாயமானவை தான். ஆனால், அவ்வாறு

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

## இதய அஞ்சலி



ப.செல்வராசா (வள்ளுவர்)

வள்ளுவர் ஐயா என்று எம்மால் அழைக்கப்பட்ட செல்வராசா விசுவமடுவில் அவரது இல்லத்தில் 23.07.2014 அன்று உயிரிழந்த துயரச் செய்தியை தோழர்களுடன் பகிர்ந்து கெள்வதுடன் அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை உரித்தாக்குகிறோம். அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்

சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து சமூகமாற்றத்திற்காக உழைத்த தோழர் செல்வராஜா 1988 இலிருந்து 2003 வரை ஈபிஆர்எல்எவ் இன் சமூக, அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டவர்.

# அபகீர்த்தியான வரலாறு தொடர வேண்டாம்!

### பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அறிக்கை



பேருவளை, அளுத்கம, தர்ஹாநகர் பகுதியில் முஸ்லீம்கள் மீதான தாக்குதல் இரு தரப்பினரிடையேயுமான மோதல் அல்ல. முஸ்லீம் மக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்.

முஸ்லீம்களுக்கு அல்லது சிறுபான்மையினருக்கு பாடம் படிப்பித்தல் என்ற முறையில் காரியங்கள் நிகழ்கின்றன.

நாட்டின் அதிகாரசக்திகள் சிறுபான்மைச் சமூகங்கள் மீது வெறுப்பையும் குரோதத்தையும் உமிழும் பேரினவாத, மதவாத சக்திகளுக்கு வரையறையற்ற சுதந்திரத்தை வழங்கியுள்ளன .

காலம் காலமாக இந்த நாட்டை உருப்பட விடாமல் தடுத்து வருவது பிரதானமாக இத்தகைய 'சத்திராதி' நடவடிக்கைகளே.

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின்
கருத்துக்கள் செய்திகளை
இணையத்தில் பார்வையிட
http://www.eprlfnet.com
LIKE US ON facebook
முக நூலில் விரும்ப
Eprlf Pathmanaba
FOLLOW US ON twitter
டுவீற்றரில் தொடர
https://twitter.com/EPRLF

## மட்டுநகர் :

## மீனவர்கள் பிரச்சினை



மட்டக்களப்பு நகரில் இயங்கிவந்த ஐஸ் தொழிற்சாலை கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளமையால் மீனவர்கள் சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வாழைச்சேனை நகரத்திற்குச் சென்று தமக்குத் தேவையான ஐஸ் கட்டிகளை கொள்வனவு செய்ய வேண்டிய நெருக்கடி தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானிய அட்டைகள் இவ் வருட ஆரம்பத்திலிருந்து வழங்கப்படவில்லை. இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்களத்திடம்

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

டொமினிக் ஜீவாவிற்கு விருது

பக்கம்- 02

இரணைமடு யாருக்கு நஷ்டம்

பக்கம்- 04

வீட்டுக்கு உரிமையற்ற மக்கள்

பக்கம்- 05

காசா சங்காரம் நிகழ்கிறது

பக்கம்- 06

வெலிக்கடை படுகொலை நினைவாக

பக்கம்- 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

KANNODDAM

294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022




## இலங்கையில் மக்களாட்சியும் ஜனநாயகமும் அடைய வேண்டிய இலக்குகளும்

இலங்கையின் சமூக அரசியல் தளம் ஜனநாயக மயப்படுத்தப் படுவது இன்றைய வரலாற்றுத் தேவையாகவுள்ளது.

எப்போதோ அடையப்பட்டிருக்க வேண்டிய சமூக பொருளாதார பாய்ச்சல் என்பது அடையப்பட முடியாத இலக்காக இன்றளவில் இருந்து கொண்டிருப்பதற்கு காரணம் இலங்கையர்களின் வாழ்வு ஜனநாயக கட்டுமானங்கள் அரித்தழிக்கப்பட்டு வந்ததும் புதிதாக எதுவும் உருவாக்கப்படாததுமாகும்.

விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை, பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன இலங்கையின் முன்னேற்றத்திற்கு பங்களிக்குமென யாரும் சொல்வார்களாயின் அவர்கள் அதிகார மமதை கொண்ட மனநோயாளிகளாகவே இருப்பார்கள்.

அவசர அவசியமான ஜனநாயக சீர்திருத்தங்கள் நாட்டின், மக்களின் அனைத்து மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

- இன சமூகங்களின் உரிமைகளை அங்கீகரித்தல், சமூகங்கள் சமத்துவமாக வாழ வழியேற்படுத்துதல்
- மரபார்ந்த சமூகத்தின் சாதி, பெண்ணடிமைத்தனம் போன்றவைகளை களைதல்.
- பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.
- கல்வி, சுகாதார சேவைகள் அனைத்து மக்கள் பிரிவினருக்கும் பாராபட்சமின்றி கிடைக்க வழி செய்தல்.
- அதலபாதாளமாக விரிந்திருக்கும் வர்க்க ஏற்றத் தாழ்வுகளை களைதல்
- அதிகார வர்க்க அகங்காரங்கள் களையப்பட்டு மக்களுக்கு நட்பான நிருவாக இயந்திரம்
- மக்களுக்கு நட்பாக இல்லாத ஊழல் படிந்த சட்டம் ஒழுங்குத்துறையின் மறுசீரமைப்பு சுயாதீனம், அதிகார பகிர்வு கட்டமைப்பின் அங்கமாக்குதல்.
- நிலமில்லாதவர்களுக்கு நிலம் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் இன சமூக பிராந்திய நலன்களுடன் இசைவுபட்டதாக அமைதல்.
- தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டம்.
- மத்திய கிழக்கு, மேற்காசிய நாடுகளில் பணிப்பெண்களாக பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஊதிய உத்தரவாதம்.
- ஆடை தொழிற்சாலை உள்ளிட்ட தொழிற்துறைகளில் குறைந்த ஊதியத்தில் வேலை செய்யும் பெண்களின் சுய பாதுகாப்பு.
- விவசாயம், மீன்பிடி துறைகளின் பாதுகாப்பு இதில் ஈடுபடும் பெருவாரியான மக்களின் நல்வாழ்வு மற்றும் குடிநீர், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட விடயங்களில் கரிசனை.
- காலகதியில் அற்றுப்போகக்கூடிய வளங்களின் பாதுகாப்பு.
- சிறுவர்கள், பெண்களின் பாதுகாப்பு, சிறார் கல்வி தரமுயர்த்துவதும் - மறுசீரமைப்பதும்.
- உள்ளூர் வளங்களை பயன்படுத்தும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது, சேவைத்துறைகளை விருத்தி செய்து வேலை வாய்ப்புக்களை வழங்குவது.
- ரவுடிகளும், பண முதலைகளும், அயோக்கியர்களும் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு செல்லும் நிலைமைகளை கட்டுப்படுத்துவது.
- மக்கள் தமது கோரிக்கைகளை அபிலாசைகளை சுதந்திரமாக தெரிவிப்பதற்கான இடைவெளி. இது எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது.


வளங்களின் முறையான பயன்பாடும் சமூகங்களிடையே ஐக்கியமும் இலங்கையை நம்பிக்கையான எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும்.

ஆனால் இன, சமூக வெறுப்பினூடாக இந்த நாட்டை நரக படுகுழிக்குள் அழைத்துச் செல்ல தீய சக்திகள் விடாப்பிடியாக முயல்கின்றன.

இந்தச் சக்திகள் இலங்கையர்களின் கண்ணியமான வாழ்வில் தலையிடுவதிலிருந்து தள்ளி வைக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் நாடு விமோசனப் பாதையில் காலடி எடுத்து வைக்க முடியும்.

## டொமினிக் ஜீவா பெற்ற விருது



மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்கான இயல் விருது (2013) வழங்கப்பட்டுள்ளது.

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கிய இந்த விருது பரிசுக் கேடயமும், 2500 டொலர் பணப் பரிசும் கொண்டது. இந்த விருதைப் பெறும் 15 வது ஆளுமை கொண்டவர் இவராவார்.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களை நேசித்த தோழர் டொமினிக் ஜீவா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் மார்க்கத்தை தேர்ந்தெடுத்துப் பின்பற்றி வந்தவர்.

இலக்கியப் பணிகளின் ஊடாக, தமிழ், சிங்கள, முஸ்லீம் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சித்தவர். இது வரை 5 சிறுகதை தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். அதில் 'தண்ணீரும் கண்ணீரும்' தொகுப்பு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

சுமார் அரை நூற்றாண்டு காலமாக மல்லிகை என்ற இலக்கியச் சிற்றிதழை வெளியிட்டு வருகிறார். மல்லிகை இதழ் பல இலக்கிய ஆளுமைகளின் விளை நிலமாக இருந்திருக்கிறது.

யாழ் பல்கலைக் கழகம் வழங்க முன்வந்த டாக்டர் பட்டத்தை பெற மறுத்த டொமினிக் ஜீவா, இவ்வருடம் தனது 88வது பிறந்த நாளை கொண்டாடும் வேளையில் இலக்கியப் பணிகளுக்காக வழங்கப்படும் மேற்படி விருதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வைத்து 17 ஜூலை 2014 அன்று விருதினைப் பெற்றுக்கொண்ட தோழர் டொமினிக் ஜீவா அவர்களை அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பான அவரது அரசியல், இலக்கியப் பங்களிப்புக்களுக்காக நாமும் வாழ்த்துவோம்.

## அபிமன்யு பதில்கள் — வெளியீடு அறிமுகம்

கண்ணோட்டம் பத்திரிகையில் பிரசுரமான "அபிமன்யு பதிலகள்" கேள்வி பதில் பகுதி தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளியின் பின் ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் வெளியீடாக இந் நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அபிமன்யு பதில்கள் நூல் ஜூன் 21ம் திகதி இலண்டனில் நடைபெற்ற தியாகிகள் தின வைபவத்தின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் பற்றி அரசியல் ஆய்வாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான சிவலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்தினார். இலங்கையில், யாழ்ப்பாணத்தில் அபிமன்யு பதில்கள் நூலின் அறிமுக நிகழ்வு 06.07.2014 அன்று நடைபெற்றது. பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அலுவலக கேட்போர் கூடத்தில இடம்பெற்ற இந்த நிகழ்வில் தோழர்கள், நண்பர்கள் நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




கா. ஜெயக்குமாரனின் (கங்கா) வரவேற்புரையுடன் ஆரம்பமான இந் நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய திருநாவுக்கரசு ஶ்ரீதரன் (தோழர் சுகு) அபிமன்யு பதில்கள் நூலில் உள்ள விடயங்கள் நெருக்கடியான, ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட காலகட்டத்தில் கண்ணோட்டம் பத்திரிகையில் வெளிவந்த வகையில் முக்கியத்துவம் மிக்கதாகும். கேள்விகளுக்கான பதில்கள் சற்று நீண்டதாகக் காணப்பட்டாலும் இலங்கைத் தமிழர்களது அரசியல் நிலைமைகளை, பல உண்மைகளை தெளிவுபடுத்தும் விதத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

நூல் குறித்த அறிமுக உரையை ஆசிரியரும், சமூக சேவையாளருமான இரா. செல்வவடிவேல் ஆற்றினார். அவர், இந்த நூலின் படி திருத்தும் பணியை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியிருந்தது. நூலை இறுதி வரை ஆர்வத்தோடு வாசிக்கும் வகையில் கேள்வி பதில்கள் அமைந்திருந்தன எனத் தெரிவித்தார். வெவ்வேறு காலகட்டத்தில் இடம் பெற்ற சம்பவங்களை இளைய சமுதாயத்திற்குத் தெரியப்படுத்த இந் நூல் இது உதவும் எனவும் இன்றைய சூழலில் இது அவசியமாகும் எனவும் குறிப்பிட்டார்.

நூல் மதிப்பீட்டு உரையினை ஆற்றிய முன்னைநாள் ஆசிரிய ஆலோசகர் ஏ.சி.ஜோர்ச் இந் நூலில் எழுதப்பட்டுள்ள விடயங்கள் பெரும்பாலானவை புலிகள் குறித்ததாகவே காணப்படுகின்றன. 2009 க்கு முன் இங்கே நிலவிய சூழ்நிலையில் அவை பொருத்தமானவையாகக் கூட இருக்கலாம். ஆனால், 2009 க்கு பின்பும் அதில் மாற்றத்தினைக் காண முடியவில்லை. முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரும் புலிகளின் கருத்தியல் நிலைபெற்றிருப்பதை மறுக்க இயலாது. ஆயினும், மக்களுடைய ஏனைய பிரதானமான பிரச்சினைகளையும் தொடுவதாக இருந்திருந்தால் நன்றாக அமைந்திருக்கும் எனத் தெரிவித்தார்.

இறுதியில் நன்றியுரை வழங்கிய வ.விக்னேஸ்வரன் (கிருபா),

எங்களுடைய அரசியல் கருத்துக்களோடு மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பினும் எமது அழைப்பை ஏற்று, நட்புணர்வோடு இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றியவர்களுக்கும் எமக்கு ஆதரவு நல்கி ஊக்கமளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

294, கண்டி வீதி
புங்கங்குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
021 2222022

**E P I C**
**P.O. Box 431**
**Sutton SM1 9LE**
**UK**
email: eprlfp@yahoo.co.uk

159, கடல்முக வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப...

கடன் பெற்ற கடனாளிகள் பரிதவிக்கும் நிலை கவலைக்குரியது . லீசிங் வசதிகள் பெற்ற பலர் தமது சுயத்தை இழந்துள்ளனர்.

- தேவன் தென்மராட்சி -

தமிழ் மக்களின் பொருளாதாரம் யுத்தத்தின் பின் தளர்வுற்றுள்ளதா? வளர்ச்சியடைந்துள்ளதா ? என்பதே தற்போதைய கேள்விகளாக உள்ளன. தமிழ் சமூகம் நலிவுற்ற சமூகமாக, துன்பகரமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

கால்மார்க்ஸ் கூறியது போல "இழப்பதற்கு எதுவும் இல்லை பெறுவதற்கு இவ் உலகம் உண்டு" என்ற நிலையிலேயே இம் மக்களின் வாழ்வியல் இருக்கிறது.

விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள், சுய தொழில் உற்பத்திகள், பயன்தரு மரங்கள் என்பனவும் பாதிப்புக்குள்ளாகிய நிலையிலேயே காணப்படுகின்றன. இந் நிலையில் மாற்றம் எய்தியபடி கட்டுமானங்கள், செப்பனிடப்பட வேண்டும்.

உற்பத்தி முயற்சிகள் ஊக்குவிக்கப்படவும், மேற்கொள்ளப்படவும் வேண்டும். "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்" கவிஞரின் வரிகள் எமக்கும் பொருந்தும்.

எமது பிரதேசத்தில் கடற்தொழில் சார்ந்த ஐஸ் உற்பத்தி, கடல் உணவு பதனிடும் தொழிற்சாலைகள், தேங்காய் எண்ணெய் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, விவசாய உள்ளீடுகள், காகித உற்பத்தி தொழிற்சாலைகள் நிறுவப்படல் வேண்டும்.

எமது மக்களின் வேலைவாய்ப்பு நிறைவு செய்யப்பட வேண்டும். மக்களின் தேவைகள் பூர்தியாகும் போது மகிழ்வான வாழ்வும் புதிய நம்பிக்கையும் புதிய உணர்வும் ஏற்படும் மானிட வாழ்வுக்குப் பொருளாதாரம் இன்றியமையாதது.

தமிழ் மக்களின் சிதைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வடக்கு மாகாண சபை பெருமளவு பங்களிப்பை வழங்கி சிறு சிறு உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ளலாம். உதாரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் தேங்காய் தாராளமாகக் கிடைக்கின்றது. அம் மூலப்பொருளைக் கொண்டு தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலையை அமைத்து எண்ணெயை பைக்கற்றுக்கள், போத்தல்களில் அடைத்து .ஏற்றுமதி செய்யலாம் அல்லது உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யலாம்.

பலர் வேலைவாய்ப்புக்களைப் பெறச் சிறந்த வழிமுறையாகவும் இருக்கும் இதனூடாக அவர்களது வருமானம் அதிகரிக்கும் வாழ்வு ஒளிமயமாகும். வீணாகக் காலங்களை வீணடித்து வீம்பு பேசுவதை விடுத்து வீரியமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒருகணம் சிந்திப்பதும் அதன்வழி செயற்படுவதும் அவசியம்.

**விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள் யாவும் பாதிப்புக்கு உள்ளாகிய நிலையிலேயே காணப்படுகின்றன. வீரியமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வழிவகை குறித்து ஒருகணம் சிந்திப்பதும் அதன்வழி செயற்படுவதும் அவசியம். தவறின் ஒவ்வொரு மனிதனும் கடனாளியாகவும் தற்கொலை செய்கின்ற வகையாகவும், கையறு நிலையில் நாட்டைவிட்டு ஓடுகின்றவனாகவும், ஏமாற்றும் பேர்வழிகள் ஆகவும் மாற நேரிடும். மக்களின் வாழ்வாதாரம் சிறப்படையும் பட்சத்தில் எமது கலாசாரம், பண்புகள் சிறப்படையும்.**

தவறின் மலட்டுத்தனமான சமூகமாக வளரும். இதனால் ஒவ்வொரு மனிதனும் கடனாளியாகவும் தற்கொலை செய்கின்ற வகையாகவும், கையறு நிலையில் நாட்டைவிட்டு ஓடுகின்றவனாகவும், ஏமாற்றும் பேர்வழிகளாகவும் மாற நேரிடும்.

கடனைப் பெற்ற கடனாளிகள் பரிதவிக்கும் நிலை கவலைக்குரியது. லீசிங் வசதிகள் பெற்றே பலர் தமது சுயத்தை இழந்துள்ளனர். எங்களது பிரதேசத்தில் பல ஆலைகள் நிறுவப்பட்டு சிறந்த வாய்ப்பளிக்கப்பட்டு மக்களின் வாழ்வியல் சிறக்க பொருளாதாரக் கட்டுமானங்கள் மேலோங்க வேண்டும்.

சமூகப் பொறுப்புணர்வோடு ஒவ்வொருவரும் செயற்பட்டால் மக்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். மாற்றத்துக்குரிய எண்ணம் நல்ல பொருளாதார வலுவை உயர்த்த நாம் அனைவரும் முன்வருவோம்.

எமது மக்களின் துயர் நீங்க வேண்டுமாயின் பொருளாதாரத்தின் மேம்பாடு இன்றியமையாதது. சாதாரண மக்களின் வாழ்வியல் மேன்மைபெற வடக்கு மாகாணசபை தூர நோக்குள்ள பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

வெறுமனே அரசை எதிர்ப்பதை நோக்காகக் கொண்டாலும் மக்களின் நலன் சார்ந்த விழுமியங்கள் பொருளாதார விருத்தி தொழில் மேம்பாடுகள் சிறப்பாக செயற்பட தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

வன்னிப் பிரதேசத்தில் தொழிலின்றி அவதிப்படுவோர் அதிகமாகக் காணப்படுகின்றனர். எமது பிரதேசத்தில் உள்ள விவசாயம் இந்திய மாநிலங்களில் உள்ளதைப் போன்று காணப்படுகிறது. அந் நாட்டில் உள்ளதைப் போன்று விழிப்புணர்வை ஏற்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் நவீன முறைகளைப் பயன்படுத்தி அதன் மூலம் சிறந்த பயனை மக்கள் பெற்று எமது நாடு "செந் நெற்களஞ்சியமாக" ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். குளங்கள் புனரமைப்பு உட்கட்டுமானங்கள் செப்பனிடப்படல் வேண்டும் கைதடியிலிருந்து தொண்டமானாறு வரையுள்ள பரவைக்கடல் ஆழமாக்கப்பட்டு நன்னீர் மீன்வளர்ப்பு, இறால்வளர்ப்பு போன்ற திட்டங்களை செம்மையாக செய்தால் அதனைச் சுற்றியுள்ள நிலம் விவசாயத்திற்கு ஏற்றதாய் மாறும் கிணறுகள் உவர் நீரிலிருந்து பாதுகாக்கப்படும். உப்பு மண் குடிமனைகள் நோக்கி வீசாது மக்கள் வாழ்வு சிறக்கும்.

பனைவளம் சம்பந்தமான செயற்பாடுகள் மேலும் பலவித உற்பத்திகள் நவீனமயப்படுத்தப்படின் பனைவளம் சார் உற்பத்திகளில் ஈடுபடும் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி பயணிக்கும்.

எமது மக்களை ஏதிலிகளாக கையேந்த விடாமல் அவர்களின் பொருளாதாரம் அபிவிருத்தியடைய மாகாணசபை எவ்வகையான வேலைத்திட்டங்களை வைத்துள்ளது. வெறுமனே ஆளுநரை மாற்று, ஆளுநரின் அதிகாரங்களைப் பறி என்று கோஷமிடுவதை விட்டு விட்டு யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களின் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் ஆய்வுகளை மேற்கொண்டு மக்களின் வாழ்வியல் மாற்றத்தையடைய ஒரு பசுமைப் புரட்சிக்கு வித்திட முன்வர வேண்டும்.

கறைபடிந்துபோன நாட்களை மறந்து எல்லோரும் மக்களின் பொருளாதார நல்வாழ்வுக்காக ஒன்றுபட்ட எங்கும் தொழில் வளம் பெருக்கும் சமூகமாக மாற்றமடையச்செய்ய வேண்டும். மக்களின் வாழ்வாதாரம் சிறப்படையும் பட்சத்தில் எமது கலாசாரம், பண்புகள் சிறப்படையும்.

கிராமியப் பொருளாதாரம் அதற்கான கட்டுமானங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் உதாரணமாக கல்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி போன்ற இன்னோரன்ன செயற்பாட்டினை சரியாக ஊக்குவிக்கலாம். தமிழ் மக்களின் பாரம்பரிய தொழிற்துறை மேம்பாடடைய விழிப்புணர்வும் எமது பிரதேசம் என்ற பற்றுணர்வும் வளர வேண்டும்.

சுய பொருளாதாரத்தை விருத்தியடையச் செய்ய அர்ப்பணிப்புள்ள சமூகப் பொறுப்புள்ள சமூக ஆர்வலர்கள் நலன் விரும்பிகள் முன்வர வேண்டும். பெண் தலைமைத்துவமுள்ள குடும்பங்களின் பொருளாதாரம் வளம்கொழிக்க இவ்வாறான செயற்பாடுகள் துணைபுரியும்.

எது எவ்வாறாயினும் பொருளாதார மேம்பாட்டிற்கு அனைத்து தரப்பினரும் கைகோர்த்தால் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கை சிறப்புற வழி செய்யலாம். ●

## அரசியல் பிழைத்தோர்க்கு அற ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

சென்ற இடதுசாரி அரசியல் தலைவரான கொல்வின் தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சனை தீர்வுக்கான முயற்சிகள் 1956,1960களின் நடுப்பகுதி 1970, 1980 களின் முற்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பேரினவாதம் அதற்கு இடையூறாக, தடையாக இருந்தது.

1987 இல் ஒருவாறாக இந்திய- இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் ஒரு அதிகாரப் பகிர்வு முறை காரியசாத்தியமாகும் நிலை எட்டப்பட்டது.ஆனால், அது பெரும்பான்மைச், சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த அதிதீவிர வாதிகளால் நிராகரிக்கப்பட்டது.அதனை ஆதரிப்பதற்கெதிராக மிகப்பெரிய வன்முறை, படுகொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும், மாகாணசபை முறை தட்டுத் தடுமாறி இன்றுவரை தாக்குப் பிடிக்கிறது.

இன்றும் மாகாண சபைமுறையை ரத்துச் செய்யவேண்டும் என்று பேரினவாத அதிதீவிரவாத சக்திகளும் 13வது உகந்த தீர்வல்ல என்று தமிழ் அதிதீவிரவாத சக்திகளும் உரத்துக் கத்திக் கொண்டும் முணுமுணுத்துக் கொண்டும் இருக்கின்றன.

அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பகிர்ந்து கொள்வதனூடாக மக்களுக்கு வினைத்திறதுடன் சேவையாற்ற முடியும் என அதிகார மையவாத சக்திகள் எண்ணவில்லை. மாறாக, தமது அதிகாரக் கடிவாளத்தை மனம்போன போக்கில் இறுக்கிக் கொள்ளவே விரும்புகின்றன.

சாரம்சத்தில் சமஸ்டிமுறையிலான அரசியல் தீர்வை பரிந்துரைத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அதனை பாராளுமன்றத்தில் சமர்பித்த போதும் எதிர்க்கட்சி மேசைகளில் அவை எரிக்கப்பட்டன. தமிழர் தரப்பும் அதனை தீயிட்டவர்களுடன் சேர்ந்து எதிர்த்தது.

இனப்பிரச்சனைக்கு உருப்படியான தீர்வு என்று யாரும் மனப்பூர்வமாகச் செயற்பட்டால் உடனடியாக இனவாத அதிர்ச்சி அலைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

1972 அரசியல் யாப்பு சிறுபான்மையினருக்கு சோல்பரி அரசியலமைப்பால் வழங்கப்பட்டிருந்த அற்ப சொற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளை ரத்துச் செய்தது.

- சுகு ஸ்ரீதரன் -

1978 அரசியல் யாப்பு சகல அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பாராளுமன்றத்தின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கியது. அதேகாலத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் கடந்து வந்த 3 தசாப்தகால ஜனநாயக மனித உரிமை சிதைவு மற்றும் யுத்த விதி மீறல் களிலும் கணிசமான பங்கு வகித்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்று? 60 க்கு மேற்பட்ட ஆண்டுகளில் இலங்கையின் ஜனநாயகம் அரித்தழிக்கப்பட்டு வந்திருக்கிறது.

1970 களில் நிலச் சீர்திருத்தம் நில உச்ச வரம்புச் சட்டம் சுய பொருளாதாரம் பற்றி பேசப்பட்டாலும், அது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. இன்றளவில் மத்திய அரசிடமே கூடுதலான நாட்டின் நிலங்கள் இருக்கின்றன. மற்றும் இலங்கை[illegible]வர்கள் என்ற கணிசமான மக்கட் தொகையினர் இருக்கின்றனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை அவர்களின் குடியிருப்பு பிரச்சனைகள், கல்வி ,சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட விடயங்களிலும் ஊதியத்திலும் கண்ணியமான வாழ்க்கை நிலையை அடையவில்லை.

மத்திய கிழக்கிற்கு பணிப் பெண்களாக சென்ற லட்சக்கணக்கானவர்கள் மற்றும் ஆடைத்தொழிற்சாலை உள்ளிட்ட துறைகளில் வேலைசெய்யும் பெண்கள் உள்ளிட்டவர்களின் வாழ்க்கை மேம்பட்டதாக இல்லை.

குறிப்பாக வடக்கு கிழக்கில் வன்னியில் பரவலாக உறவுகளையும் உற்ற சுற்றத்தையும் யுத்தத்திற்கும் வன்முறைக்கும் காவு கொடுத்தார்கள். அதேபோல் தெற்கிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள்.நாடு இராணுவமயப்பட்டுவிட்டது. 1.5 மில்லியன் பேர் இந்த நாட்டை விட்டு புலம்பெயர்ந்து போய்விட்டார்கள்.

வாழ்வதற்கான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு ஜனநாயக இடைவெளி வேண்டும்.

அது இன- மத -சாதித் தடைகளை மேலாதிக்க அகங்காரத்தை தகர்த்தலும் இவற்றின் பெயரில் நிகழும் ஒடுக்குமுறைகளைக் களைதலும் ஏகப் பெருவாரியான மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதான முயற்சியும் சமூகங்களிடையே நல்லுறவை வளர்த்தலும் சமூகங்களின் மற்றும் தனிமனித சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதும், பீதியற்ற வாழ்வை ஸ்தாபிப்பதும் முக்கியமானதாகும். ●

## அபகீர்த்தியான வரலாறு தொடர .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு முழுவதும் அனேகமாக இனவன்முறைகள் திட்டமிட்டமுறையிலேயே சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

அரசியல், பொருளாதார மற்றும் கல்வியில் சிறுபான்மைச் சமூகங்களின் வளர்ச்சி இந்த சக்திகளால் சகிக்க முடியாததாக இருக்கிறது. இலங்கை முஸ்லீம் மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்கள் முடிவுக்கு கொண்டவரப்படவேண்டும். இது வெட்கக் கேடானதும் அவமானகரமானதும் இழிவானதும் ஆகும்.

இந்த நாட்டில் கண்ணியமாக சகசமூகங்களுடன் சமத்துவமாக, சமாதானமாக வாழ விரும்பும் பிரசைகள் எவரும் இதனை தயவுதாட்சணியமின்றிக் கண்டிப்பதோடு இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் தொடராமல் இருக்க உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பௌத்தமத அறக்கோட்பாடுகளை இழிவு செய்யும், காலில் போட்டு மிதிக்கும் பிரகிருதிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும். இவற்றை தலையில் சுமப்பது அவக்கேடாகும் . இந்த அபகீர்த்தியான வரலாறு தொடர வேண்டாம்.

இந்த வன்முறைகள் தொடர்பாக பாரபட்சமற்ற நீதியான விசாரணை வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிட்ட வேண்டும்.

கொல்லப்பட்டவர்களின் உறவுகளுடன் துயர்பகிர்கிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஷ்டமடையப்போவது யார்?

**இரணைமடு குளத்தை அபிவிருத்தி செய்து அதன் நீர் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும். பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நிலத்தின் அளவை அதிகரிக்க வேண்டும் என்பது கிளிநொச்சி விவசாயிகளின் நீண்டகாலக் கோரிக்கையாகும் சரியான நீர் முகாமைத்துவம் இன்மையால் இரணைமடுவில் தேக்கப்படும் நீரின் அளவை விடவும் கூடுதலான அளவு நீர் வீணாகிவருகிறது**

நாட்டின் இதர பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுப்பதில் அக்கறை செலுத்தும் அரசாங்கம் தமிழர் வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை புறக்கணித்து பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்பது தமிழ் தலைவர்கள் தெரிவித்துவரும் குற்றச்சாட்டாகும். இதில் ஓரளவு உண்மையும் இல்லாமலில்லை.

இந் நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கி, பிரான்ஸ் அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் கிளிநொச்சி -யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டம் என அழைக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வந்துள்ளது. இதற்கென 2300 கோடி ரூபாவை செலவிட ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி யாழ்பாணம் குடிநீர் விநியோகத் திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளபோதும் இது தனியே இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீரை மட்டும் வழங்கும் ஒரு திட்டம் அல்ல.

இந்தத் திட்டம் 2000 ஆம் ஆண்டளவில் முன்மொழியப்பட்ட போது புலிகளின் ஒப்புதலும் பெறப்பட்டது. அப்போது புலிகளின் ஆளுகையின் கீழ் இருந்த விவசாயிகள் எந்த கருத்தையும் சொல்லாமல் மௌனமாக இதனை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார்கள். இன்று அதே விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் "என்ன விலைகொடுத்தும் இந்த நீர்விநியோகத் திட்டத்தை தடுத்தே தீருவோம்" என்று தெரிவித்துள்ளனர். இரணைமடு குளத்தின் நீர்ப்பாசனத்தைப் பெற்று பயிர்செய்யும் 22 கமக்காரர் அமைப்புக்களில் 6 - 7 கமக்காரர் அமைப்புக்களே இந்தத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

இதனால், பெரும் நிதி ஒதுக்கீட்டுடன் வட மாகாணத்திற்கு கிடைத்த இப் பாரிய திட்டம் இழுபறி நிலையை எட்டியுள்ளது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி மீளப்பெறப்படுவதற்கான அபாயம் தோன்றியுள்ளதுடன் அது தென்பகுதியில் வேறொரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு திருப்பப்படுவதற்கான முனைப்புகளும் உருவாகியுள்ளதாகவும் சுட்டிக் காட்டி எச்சரிக்கப்பட்டுள்ளது.

## திட்டத்தின் நோக்கங்கள்

இரணைமடு குளத்தின் அணைக்கட்டுக்களை புனரமைத்தல், உயர்த்துதல், குளத்திலிருந்து செல்லும் வாய்க்கால்களை புனரமைத்தல், பளையில் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்தல், யாழ் மாநகர சபை எல்லைக்குள் நிலத்தடி நீர் அசுத்தமடையக் காரணமாயுள்ள மலசல கூடங்களிலிருந்து குழாய்கள் மூலம் கழிவகற்றும் வலையமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதுடன் கல்லுண்டாயில் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் ஒன்றை அமைத்தல், யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீரைப் பாதுகாக்க 900 குளங்களை புனரமைத்தல் போன்ற திட்டங்களை உள்ளடக்கியிருப்பதுடன் கல்லுண்டாய் சுத்திகரிப்பு மையத்தில் மலசல கூடக் கழிவுகளிலிருந்து பெறப்படும் நீர் மற்றும் திண்மக் கழிவுகளை விவசாயத்திற்கு பயன்படுத்துவதும் சாத்தியமாகும்.

## இரணைமடு நீர்த்தேக்கம்

இரணைமடு குளக்கட்டுக்கள் 34 அடி உயரத்திற்கு நீரை தேக்குவதற்காக அமைக்கப்பட்டன. ஆனால், நீண்ட காலமாக புனரமைக்கப்படாதுள்ள அணைக்கட்டில் கசிவுகள் விரிசலடையும் அபாயம் காரணமாக 28 அடி முதல் 30 அடி வரையே நீர் தேக்கப்படுகிறது. இதற்கான பதிவுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 500 ஏக்கர் /அடி நீரை தேக்கிவைக்கக் கூடிய இரணைமடு நீர்தேக்கத்தில் அணைக்கட்டுக்கள் வலுவற்றிருப்பதால் 82 ஆயிரம் ஏக்கர்/அடி நீரே தேக்கிவைக்கப்படுகிறது. அணைக்கட்டை புதுப்பித்து, உயர்த்தி நீர் கொள்ளளவை மேலும் 2 அடி அதிகரித்து 36 அடி உயரத்திற்கு நீரை தேக்கும் வகையில் 100 வருட உத்தரவாதத்துடன் அணைக்கட்டை புனரமைப்பதுடன் வெள்ள அபாயங்களை தவிர்க்கும் வகையில் மூன்று புதிய வான்கதவுகளை அமைப்பதற்கும், அணைக்கட்டின் மீது போக்குவரத்திற்கான வீதியை அமைப்பதற்குமான வழிவகைகளும் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்போது இரணைமடு குளத்தில் தேக்கப்படும் நீரின் அளவிற்கு சமனாக விரயமாகும் மழைநீரின் ஒரு பகுதியையும் மேலதிகமாக இரணைமடு குளத்தில் தேக்கிவைக்க முடியும். அணைக்கட்டு புதுப்பிக்கப்படும் போது ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் /அடி நீரை தேக்க முடியும் எனவும் திட்டத்துடன் தொடர்புடைய துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் மேலதிகமாகச் சேமிக்கப்படும் 13 ஆயிரத்து 500 ஏக்கர் /அடி நீரிலிருந்து 12 ஆயிரம் ஏக்கர் /அடி நீர் மட்டும் கிளிநொச்சி யாழ்ப்பாணம் நீர் விநியோகத் திட்டத்திற்கு விடுவிக்கப்பட உள்ளது. நீர் விநியோகமானது நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், நீர்க்குழாய்கள் பொருத்தும் பணிகளுடன் தொடர்புடையதாகையால் குளத்திலிருந்து விடுவிக்கும் நீரின் அளவு ஆரம்பத்தில் 1500 ஏக்கர்/அடியாகவும் 20 வருடங்களிலிலேயே 12 ஆயிரம் /ஏக்கர் அடியாக ஆகும் எனவும் திட்டப் பணிப்பாளர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் மழை நீரை தேக்குவதற்கும், நிலத்தடி நீர் உவராவதை தடுப்பதற்குமான செயற்திட்டங்களை முன்னெடுத்து யாழ் குடா



நாட்டு மக்களின் குடிநீர் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முழுமையாகப் பயன்தருகிறதா?

இரணைமடு குளத்தின் நீர்ப்பாசனத்தை பெறும் விவசாயிகள் காலபோகத்தில் 22 ஆயிரம் ஏக்கர்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்றார்கள். மேலும் 16 ஆயிரம் ஏக்கர்களில் மழையை நம்பிப் பயிரிடுகின்றனர். சிறுபோகத்தில் 5 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்கின்றனர். வரட்சியான காலங்களில் இந்த அளவு மாறுபடும் எனத் தெரியவருகின்றது.

இதனால், இரணைமடு குளத்தை அபிவிருத்தி செய்து அதன் நீர் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும். பயிர்செய்கை மேற்கொள்ளும் நிலத்தின் அளவை அதிகரிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்தபோதும் அது கைகூடவில்லை.

இரணைமடு குளத்தின் கீழ் வட்டக்கச்சி, இராமநாதபுரம், குமரபுரம், முரசுமோட்டை, எட்டாம் வாய்க்கால், உருத்திரபுரம், சிவநகர் போன்ற பல குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

குடியேற்றவாசிகளுக்கு அவர்கள் எத்தனை ஏக்கர் பயிர் செய்யும் நிலத்தை வைத்திருந்தாலும் அதிகூடியது 3 ஏக்கர்கள் பயிரிடுவதற்கான பாசனவசதி வழங்கப்படுவதுடன் இந்தக் குடியேற்றங்கள் இடம் பெறுவதற்கு முன்னரே கிளிநொச்சியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட, 10 ஏக்கர்கள் வரை உறுதிக் காணிகள் உள்ள பெரும் கமக்காரர்களுக்கு 7 ஏக்கர்கள் பயிரிடுவதற்கான பாசனவசதி வழங்கப்படுகிறது. வருடந்தோறும் நடைபெறும் தண்ணீர் கூட்டத்திலேயே மேற்படி நீர் விநியோகம் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது இவ்வாறிருக்க சமூகத்தில் செல்வாக்கும் கமக்காரர் அமைப்புக்களில் ஆதிக்கமும் உள்ளவர்கள், பலரது தண்ணீர் பங்குகளை பெற்று 30 ஏக்கர்கள் வரை பாசனவசதியைப் பெற்று பயிரிடுவதும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாகும்.

கிளிநொச்சி விவசாயிகள் விரும்புவது போல் அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்கள் தீர்மானித்திருப்பது போல் இரணைமடு குள புனரமைப்பை தனியாகவும், யாழ்ப்பாணத்திற்கான நீர் விநியோகத்தை தனியாகவும் ஆக்கி இரணைமடு குள புனரமைப்பை மேற்கொண்டாலும் கிளிநொச்சி விவசாயிகள் தமது நிலத்தில் முழுமையாகப் பயிர்செய்ய இயலாது. ஆனால், அணைக்கட்டை உயர்த்தி வலுப்படுத்துவதன் மூலம் மேலதிக நீர் சேமிக்கப்படுவதுடன், வாய்க்கால்களை புனரமைப்பதால் நீர் விரையமாகுவதை தடுப்பதன் மூலமும் விவசாயிகள் தமது பயிர்செய்யும் நிலத்தின் அளவை அதிகரித்துக் கொள்ள முடியும்.

வரட்சியான காலங்களில் 36 அடி நீரை சேமிக்க முடியுமா? அவ்வாறு வரட்சி நிலவும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகத்தின் நிலை என்ன? என்று கிளிநொச்சி விவசாயிகளால் எழுப்பப்படும் கேள்விகள் கவனத்துக்குரியவை.

சரியான நீர் முகாமைத்துவம் இன்மையால் இரணைமடு குளத்தில் தேக்கப்படும் நீரின் அளவை விடவும் கூடுதலான அளவு நீர் வீணாவதாகத் தெரிவிக்கப்படுவதும், 7 வருடங்களுக்கு ஒரு முறை ஏற்படும் வரட்சியைக் காரணம் காட்டி எஞ்சிய 6 வருடங்களிலும் சமூகத்திற்குக் கிட்டும் பயன்கள் அனைத்தையும் வீணடிப்பதா என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

## பயனடையப்போவது யார்?

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகர்ப் புறங்கள், பரந்தன் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள், யாழ். பல்கலைக் கழக பொறியியல்பீடம், பளை, பூநகரி பகுதிகளுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் நகரம், கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட சுத்தமானதும், பாதுகாப்பானதுமான குடிநீர் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

யாழ் மாநகரசபை எல்லைக்குள் முறைப்படி அமைக்கப்படாத மலசல கூடங்களின் குழிகளின் கசிவுகளால் நிலத்தடி நீர் அசுத்தமடைவதை தடுப்பதற்கு 20 ஆயிரம் மலசல கூடங்களிலிருந்தும், யாழ் பல்கலைக் கழகத்திலிருந்தும் குழாய்கள் மூலம் கழிவுகளை கல்லுண்டாய் பகுதியில் அமைக்கப்படும் கழிவு நீர் சுத்திகரிப்பு மையத்திற்கு எடுத்துச் சென்று சுத்திகரிக்கப்படும்.

இவற்றின் மூலம் 3 இலட்சம் பேர் குடிநீரை பெறுவார்கள் என்றும் கழிவகற்றல் திட்டத்தின் மூலம் 80 ஆயிரம் பேர் பயனடைவார்கள் எனவும் 55 ஆயிரம் விவசாயிகள் நீர்ப்பாய்ச்சல் ஏற்பாடுகளின் பயனை பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுவதன் மூலம் மொத்த சமூகமும் எதிர்காலச் சந்ததியும் பயனடைய உள்ளது.

## மாற்றுத் திட்டம் என்ன?

இரணைமடு புனரமைப்பை தனியாகவும், யாழ் குடிநீர் விநியோகத் திட்டத்தை தனியாகவும் செயற்படுத்த வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் யோசனை தெரிவித்துள்ளனர். ஆனால், பொருத்தமான மாற்றுத் திட்டங்கள் எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

"யாழ்ப்பாண ஆறு" அல்லது "ஆறுமுகம் திட்டம்" அல்லது "Twyneham திட்டம்" (1879) என அழைக்கப்படும் ஆனையிறவு முதல் தொண்டமானாறு வரை பரந்திருக்கும் உப்பாறு மற்றும் வடமராட்சி கடல் நீரேரிகளை இணைத்து, கடலுடன் தொடர்புபடும் ஆனையிறவு, நாவற்குழி, தொண்டமானாறு ஆகிய இடங்களில் கடல் நீர் கலப்பதை தடுத்து யாழ்ப்பாணத்திற்கான ஒரு நன்நீர் ஆறு உருவாக்கப்படலாம். இதன் மூலம் இந்தப் பிரதேசங்களில் நிலத்தடி நீரின் உவர்த் தன்மையை மாற்றலாம் என்பதே"யாழ்ப்பாண ஆறு" திட்டமாகும்.

இரணைமடு குளத்தில் தேக்கப்படும் நீரைப் போன்று 3 மடங்கு நீர் வருடந்தோறும் ஆனையிறவு கடல் நீரேரியில் கலந்து வீணாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ் குடாநாட்டில் கிணறுகளில் நீர் உவராவதைத் தடுப்பதற்கு இது சிறந்த திட்டம். அதுமட்டுமன்றி 77 சதுர கிலோமீற்றர் பரப்பளவை கொண்ட ஆனையிறவு முதல் தொண்டமானாறு வரையான வடமராட்சி கடல் நீரேரி, 26 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட நாவற்குழி முதல் தொண்டமானாறு வரையான உப்பாறு ஆகியவற்றின் கரையோரங்களில் உவர் தன்மை காரணமாக பயிர் செய்யப்படாதிருக்கும் 4400 ஹெக்டயர் நிலப்பரப்பை பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலமாக மாற்ற முடியும், நன்னீர் இறால்வளர்ப்பை மேற்கொள்ள முடியும் எனவும் இந்த திட்டத்தின் பயன்கள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது.

1879 இல் யாழ் அரச அதிபராயிருந்த Twyneham என்ற ஆங்கிலேயரின் எண்ணத்தில் உதித்த இத்திட்டம் காலத்துக்கு காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஓரளவு பூர்த்தியான நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள பெரும்பகுதி பூரணப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நீரை விவசாய தேவைகளுக்குப் பயன்படுத்த முடியுமே தவிர, குடிநீராகப் பயன்படுத்துவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால் குடிநீருக்காக அல்லல்படும் மக்களின் உடனடிப் பிரச்சினைக்கு இத்திட்டம் தீர்வைத் தராது. குடிநீருக்கான மாற்றுத் திட்டமும் ஆகாது.

நிலத்தடி நீரை நம்பி மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகத் திட்டங்கள் நீர் பற்றாக்குறை காரணமாகவும், உவராதல் காரணமாகவும் கைவிடப்படும் நிலை உருவாகியுள்ளது. நாரந்தனை, புங்குடுதீவு, காரைநகர், வட்டுக்கோட்டை தெற்கு, கட்டுடை, வாதரவத்தை, கன்பொல்லை, கந்தரோடை, நவாலி ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடுப்படுகின்றது. எனவே, நிலத்தடி நீரை நம்பி மாற்றுத் திட்டங்கள் எதனையும் மேற்கொள்வது இயலாததாகும். இவை மாற்றுத் திட்டங்களை முன்னெடுக்குமாறு பரிந்துரைப்பவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

## மக்கள் நலனும் சொந்த நலனும்

தீர்க்கதரிசனத்தோடும், ஒட்டுமொத்த மக்களின் உடனடி, நீண்டகால நலன்களை சீர்தூக்கிப் பார்த்தும் சாதக, பாதகங்கள் குறித்து எடுத்துச் சொல்லியும் மக்களுக்கு முன்சென்று வழிகாட்டுபவர்களே சிறந்த தலைவர்கள். வாக்குகளுக்காக மக்களின் பின் செல்பவர்கள் தமது சொந்த நலன்களை பேணிக்கொள்வார்களே தவிர மக்களது நலன் பற்றிச் சிந்திக்கமாட்டார்கள்.

மக்களுக்கு முன்சென்று வழிகாட்டும் தலைவர்களாலேயே கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு ஒப்பீட்டளவில் நன்மை பயக்கக் கூடியதும் நீண்ட காலமாக குடிநீருக்காக அல்லற்படும் கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்ட மக்களுக்கு தீர்வை தரக் கூடியதும் எதிர்கால சந்ததிக்காக குடாநாட்டின் நிலத்தடி நீரைப் பேணக்கூடியதுமான கிளிநொச்சி யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத்திட்டம் போன்ற திட்டங்களும் சாத்தியமாகும்.

- மோகன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கும் குடியிருப்புக்கும் உரிமையற்ற மக்கள்

தோட்டத் தொழிலாளர்கள் தொழிலை இழக்கும் போது தோட்ட லயன் குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை. அதே நேரம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தும் ஏற்பாடுகளும் இல்லை. தோட்டத்தில் தொழிலாளர்களாக இல்லாதவர்கள் வசிப்பது தொடர்பில் எந்தவித சட்டப் பாதுகாப்பும் இல்லை.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலிருந்தே வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளி மக்கள் இந் நாட்டில் வாழும் ஏனைய பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்குரிய உரிமைகளை கொண்டிருக்காதது பெரும் சாபக்கேடாகும். குறைந்த கூலியில் வாழ்ந்து வரும் இம் மக்கள் இந் நாட்டுக்கு நிரந்தரமான பொருளாதாரத்தை வழங்கி வருபவர்கள். இவர்கள் குடியிருப்பதற்காக ஆரம்ப காலங்களில் தோட்ட நிர்வாகங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட லயன் குடியிருப்புக்கள் கூட இவர்களுக்குச் சொந்தமானதல்ல.

மலையக மக்களின் காணி, வீட்டுரிமை பற்றிய விடயம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று, ஹட்டனில் மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இ. தம்பையா தலைமையில் இடம்பெற்றது.

பல சிவில் சமூக நிறுவனங்கள், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், வர்த்தகப் பிரமுகர்கள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலில் 1889ம் ஆண்டு பெருந் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட முதலாவது சட்டமான தோட்டத் தொழிலாளர் (இந்தியர்கள்) கட்டளைச் சட்டம் குடியிருப்பு பற்றி எந்த ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. எனினும் அச்சட்டத்துக்கு 1941ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் பிரிவு 24 (ஐ) பிரகாரம் குடியிருப்புகள் பற்றிய ஏற்பாடு சேர்க்கப்பட்டது குறித்துக் கருத்துப் பரிமாறப்பட்டது.

1941ம் ஆண்டுக்கு முன்னர் தொழிலாளர்களின் குடியிருப்பு அதன் தரம் தோட்ட நிருவாகிகளின் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டன. சேர்க்கப்பட்ட திருத்தமானது, தொழில் வழங்குனர் (தோட்ட நிருவாகம்) தோட்டத்தில் தொழிலாளி தானும் தனது துணையுடன் வசிக்கும்போது அவர்களுக்குத் தனி அறை வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடுகிறது. அத்தோடு அந்த அறை 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் தவிர்ந்த ஏனையோருடன் பகிர்வதற்கு அனுமதிக்கப்படலாகாது என்ற சட்ட ஏற்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சட்ட ஏற்பாட்டில் இருந்து வெளிப்படுவது யாதெனில் கணவன் மனைவியான தொழிலாளர்களுக்கென தனி அறையை கொண்ட வீட்டை வழங்கும் கடப்பாட்டை தொழில் தருநர்கள் கொண்டிருந்தனர். இந்த அடிப்படையிலேயே 8'X8', 10'X10' அறைகள் சிறிய விராந்தையுடன் அல்லது விராந்தை, குசினியுடன் வரிசையாக அமைத்துக் கொடுக்கப்பட்ட லயன் வீடுகள் ஆகும்.

குடும்பத்தில் அங்கத்தினர்கள் அதிகரித்த போதும் அதற்கேற்ப தனி அறைகள் அமைத்துக் கொடுக்கப்பட வில்லை. பரம்




பரை பரம்பரையாக வசிக்கும் தொழிலாளிகளின் பிள்ளைகள் தோட்டங்களில் தொழிலாளர்களாகப் பதியப்பட்டதால் அந்தக் குடும்பங்கள் அதே லயன் அறைகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தோட்டத் தொழிலில் இருந்து ஓய்வுபெறும் போது அல்லது வேலை இழக்கும் போது அவரின் குடும்பத்தில் வேறு எவரும் தொழிலாளியாக இல்லாதவிடத்து அவர்கள் லயன்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். குடும்பத்தில் ஒருவர் மட்டும் வேலை செய்தால் ஒரு அறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

தொழிலாளர்கள் ஓய்வு பெறும் போது அல்லது வேலையில் இருந்து நீக்கப்படும் போது லயன் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படுவதில் வேறுபாடு காண்பது அவசியம். தோட்டத் தொழிலாளர்கள் வேலைத்தளங்களுடன் தொடர்புபட்டு தோட்டக் குடியிருப்புகளுக்குள்ளேயே அடைக்கப்பட்டவர்களாக நடத்தப்பட்டு வந்தமையும், தொழிலாளர்களின் குடியிருப்பாக லயன்கள் எழுதப்படாத விதியாக இருந்து வந்தமையும், இக் குடியிருப்புப் பிரச்சினையை அரசாங்கம் பொறுப்பேற்க முன்வராத நிலைமையும் அவர்களை லயன் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றுவதில் நடைமுறைப் பிரச்சினைகளாக இருந்தன.

தொழிலை இழக்கும் போது தொழிலாளர்களை தோட்ட லயன் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை. அதேநேரம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தும் ஏற்பாடுகளும் இல்லை. அத்தோடு தோட்டத்தில் தொழிலாளர்களாக இல்லாதவர்கள் வசிப்பது தொடர்பில் எந்தவித சட்டப் பாதுகாப்பும் இல்லை என்பது கவனிக்க வேண்டிய அம்சங்களாகும்.

தோட்ட குவாட்டஸில் வசிக்கும் உத்தியோகத்தர்களை வெளியேற்ற தோட்ட முகாமைத்துவங்கள் நடவடிக்கை எடுக்கின்றன. இது சட்டத்தின்படியான நடவடிக்கையாகும். இந்த நடைமுறை தற்போது தொழிலாளர்கள் தொடர்பில் நீதிமன்றங்களுக்கு வெளியில் இடம்பெறுவதோடு நீதிமன்ற உத்தரவின் பேரிலும் இடம்பெறுகின்றன. அத்தோடு தோட்டக் காணியில் குடிசைகளை அமைக்கும் போது, வசிக்கின்ற லயன் அறைகளை, இரட்டை வீடுகளை திருத்தும் போது அல்லது விஸ்தரிக்கும் போது அவை நீதி மன்றத்தின் உத்தரவின் பேரில் அகற்றப்படும் நிலைமைகளும் காணப்படுகிறது.

பெருந்தோட்டக் காணிகள் தொடர்பில் ஒன்றில் பெருந் தோட்டக் கம்பனிகள் குத்தகை உரிமையினை பெற்றிருக்கின்றமையும் அல்லது காணி மறு சீரமைப்பு ஆணைக் குழுவுக்குச் சொந்தமாக இருக்கின்றமையும் இந்நிலைக்கு காரணமாகும். இதன் காரணமாக குறிப்பாகப் பெருந் தோட்டக் கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள தோட்டங்களில் வாழும் மக்கள் தாம் நட்ட மரத்திற்குக் கூட உரிமை கோர முடியாதவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். அரச தோட்டங்களிலும் நிலை இதுவே.

இந்தச் சட்டப் பின்னணியிலேயே குத்தகைக் காணியிலும் காணி மறு சீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணியிலும் வாழுபவர்கள் என்ற அடிப்டையில் முகவரிகள் அற்றவர்களாக மலையக மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மாறி மாறி ஆட்சி அதிகாரத்துக்கு வரும் அரசாங்கங்கள் வீடமைப்புத் திட்டத்தை முன்வைக்கின்றன. 2006ம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் ஏற்படுத்திய வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கடந்த எட்டு ஆண்டுகளில் 4200 வீடுகள் மாத்திரமே அமைக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கம் 4000 வீடுகளை கட்டித் தருவதாக தெரிவித்துள்ளது. 2012ம் ஆண்டு பராளுமன்ற சட்டத்தின் படி தொழிலாளர்கள் தங்கள் பத்து வருட ஊழியர் சேமநல நிதியிலிருந்து மூன்றில் ஒரு பங்கு நிதியை வட்டி இல்லாமல் கடன் பெற்று தாமாகவே வீடுகளை கட்டிக் கொள்ள முடியும் என ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார். ஆனால் மறைந்த பெ. சந்திரசேகரன் காலத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கான கடனை தொழிலாளர்கள் முழுமையாகச் செலுத்தியிருந்தும் அவர்களுக்கு காணி உறுதி இதுவரை வழங்கப்படவில்லை என்பதே உண்மை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களினதும் அவர்களது வழித்தோன்றல்களினதும் காணி, வீட்டு பிரச்சினை ஆரம்பநிலைத் தீர்வுகளைக்கூட எட்டவில்லை. அவர்களின் அப்பிரச்சினை வரலாறு, அரசியல், சமூக, பண்பாட்டு ரீதியில் வேறுபட்டதாகவும், தனித்துவமானதாகவும், குறிப்பானதுமாக இருந்து வருவதால் அவை பற்றி விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதாகிறது.

---

## மீனவர்கள்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

முறையிட்ட போது எரிபொருள் மானியத்திற்குப் பதிலாக மீன்பிடி வலைகள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவித்தனர். ஆனால், சுமார் 7 மாதங்கள் கடந்துவிட்ட போதும் மீன்பிடி வலைகளும் கிடைக்கவில்லை எனவும் வருத்தத்தோடு தெரிவிக்கின்றனர் மட்டுநகர் மீனவர்கள். மாகாணத்திலும், மத்தியிலும் மீன்பிடி சார்ந்த தனியான அமைச்சுக்கள் செயற்படுகின்றன. ஆனாலும், இந்த அமைச்சுக்களுக்கு மட்டுநகர் மீனவர்களின் குரல் இன்னும் எட்டவில்லை.

## உன்னிச்சை
## தேவை குடிநீர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் உன்னிச்சை குளத்திலிருந்தே நீர் விநியோகிக்கப்படுகின்றது. ஆனால், உன்னிச்சை கிராம மக்கள் குடிநீருக்காக அலையும் நிலை உருவாகியுள்ளது. உன்னிச்சை குளத்திலிருந்து நீரை விநியோகிப்பதற்கு முன்னர் உங்கள் பகுதிக்கும் நீர் விநியோகிக்கப்படும் என்று வாக்குறுதியளித்த அதிகாரிகள் இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட போதும் இன்னும் இக் கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று விரக்தியுடன் கூறுகின்றனர் உன்னிச்சை கிராம மக்கள். மட்டக்களப்பு மாவட்டத்திற்கே தண்ணீர் வழங்கும் உன்னிச்சை கிராம மக்களுக்கே தண்ணி காட்டிவிட்டார்கள் அதிகாரிகள்.

## வவுனியா:
## போக்குவரத்து சிரமம்

வவுனியா பெரியகுளம் கிராமத்தையும் கண்டி வீதியையும் (ஏ9) இணைக்கும் வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் குண்டும், குழியுமாக போக்குவரத்துச் செய்ய இயலாத அளவிற்கு மோசமாக உள்ளது. சாந்தசோலை, தம்பனைச் சோலை, பெரிய குளம் பகுதிமக்கள் தமது தேவைகளுக்காக வவுனியா நகரத்திற்கு வருவதற்கு இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். வவுனியா நகரிலுள்ள வவுனியா மகாவித்தியாலயம், கொன்வென்ட், றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் தாண்டிக்குளம் பிரமண்டல தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியின் ஊடாகவே பயணிக்க வேண்டியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## தூக்கில் தொங்கிய பெண்

வவுனியா, சாந்தசோலை கிராமத்தைச் சேர்ந்த 22 வயதான நாகேந்திரன் சியாமளா என்ற குடும்பப்பெண் கடந்த 14.07.2014 அன்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் சியாமளாவின் கணவரான நாகேந்திரனை கைதுசெய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். இச் சம்பவத்திற்கு மூலகாரணம் பொருளாதார நெருக்கடி எனத் தெரிவிக்கப்படுகிறது.

## காரைநகர் – துஷ்பிரயோ...

கோரும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையின் உள்ளே இளைஞன் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் உண்மையை வெளிக் கொண்டுவர பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

உண்மை அஞ்சாமை நடுநிலைமைக்கு பேர்வாங்கிய பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் மேலே குறிப்பிட்ட இரு சம்பவங்கள் தொடர்பாகவும் அடக்கி வாசிப்பது ஏன்? என்ற கேள்விகள் மக்களிடம் உண்டு.

அரசியல் இலாபத்தை கணக்கிட்டே அநீதிகளுக்கெதிரான போராட்டங்கள் நடைபெறுகின்றன. பாதிக்கப்பட்ட ஏழைகளின் துன்பத்திலும், துயரத்திலும் கூட சிலர் ஆதாயம் தேடிக்கொள்கின்றனர். இதனால் நியாயமான போராட்டங்கள் மலினப்படுத்தப்படுகின்றன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று சொல்லப்பட்டாலும் கல்வியில், பொருளாதாரத்தில் இவற்றின் மூலம் கிடைக்கும் அந்தஸ்த்தில், அரசியல் செல்வாக்கில் ஒருவருக்கிருக்கும் பலமே அவருக்குக் கிட்டும் சட்டப்பாதுகாப்பின் கண்ணைத் திறக்கும். சமூகப் பாதுகாப்பின் அளவை தீர்மானிக்கும் நிலையே காணப்படுகிறது.

எனவே, நீதியை நிலைநாட்ட முடிகிறதோ, இல்லையோ? பாதிக்கப்பட்ட சிறுமியின் எதிர்கால வாழ்க்கை பாழாகிவிடாது பாதுகாப்பதும் முக்கியம். சமூகப்பொறுப்புள்ளவர்களின் கடமை. அநீதிகளுக்கெதிராகக் குரல் கொடுப்பவர்களின் பொறுப்பு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனக்கு நடந்த கொடுமையை பெற்றோரிடம் கூடச் சொல்வதற்குப் பயந்து மூடி மறைத்த சிறுமி கடற்படை சிப்பாய் மீது கையை நீட்டுகிறார் என்றால் இச்சிறுமி இட்டுக்கட்டியோ, உள்நோக்கத்தோடோ பழி சுமத்தவில்லை.

இத்தகைய ஒரு சம்பவம் நடந்திருக்கக் கூடாது. இனியும நடக்க விடக்கூடாது என உண்மையாகவே கடற்படை அதிகாரிகள் விரும்பியிருந்தால் உண்மையை கண்டறிவதற்கு அவர்களுக்கு அடையாள அணிவகுப்புகள் அவசியமில்லை.

குறித்த காலப்பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் எவர் பணிபுரிந்தார், யார் சம்பந்தப்பட்டார் என்ற விவரம் அவர்களால் கண்டறியப்பட முடியாததில்லை.

இன்று பாதிக்கப்பட்டது ஒரு தமிழ் சிறுமியாக இருக்கலாம் ஆனால், இத்தகைய கெடுதலை புரிந்த ஒருவரை பாதுகாப்பது கால கெதியில் இந்த நாட்டின் வேறெந்தப் பகுதியிலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழவும், பெருகவுமே வழிவகுக்கும்.

பாதிக்கப்பட்டவர்கள் முன்வருகிறார்களோ இல்லையோ, இத்தகையை சம்பவங்களுக்கு எதிராக இன பேதமினறி இந் நாட்டை, நாட்டு மக்களை நேசிப்பவர்கள் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த நாட்டின் மீதும், இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கின் மீதும் பற்றும், நம்பிக்கையும் இதிலிருந்தே தொடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்

**இராணுவவாதம் நில ஆக்கிரமிப்பு கலாசார ஆக்கிரமிப்பு பாரியளவில் நிகழ்கிறது. தமிழ் தேசியம் தன்னுள் இருக்கும் மேட்டுக் குடித்தனம் பிராந்தியவாதம் பற்றி கேள்வி கேட்கத் தயாராக இல்லை. சமூகத்தில் வறியவர்களின் நிலை பற்றிப் பேசுவதில்லை**

போராடிய பொடியள் போய்ச் சேர்ந்த பிறகு இப்போது திருடர்கள் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள்.

உள்ளூரில் நாளாந்தம் வன்முறைகள், பாலியல் கொடுமைகளில் ஈடுபடும் கும்பல்கள் பற்றிப் பேசவரவில்லை.

சமூகத்தை, மக்களை ஏமாற்றி உசுப்பேத்தி பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டம் தொடர்ந்து இருந்துகொண்டுதான் வருகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்மென்ற விருப்பமும் கிடையாது. தீர்வுக்கான சாத்தியங்கள் உருவானால் அவற்றைச் சீர்குலைத்துவிட வேண்டுமென்ற கரிசனையுடன் இவர்கள் செயற்படுகின்றார்கள்.

கடந்த 30 வருடங்களில் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டதில் முதுகெலும்பில்லாத இந்த பிழைப்புவாதக் கூட்டமும் ஒரு காரணமாக இருந்தது.

தமிழர்களுக்குப் பொறுப்புள்ள தன்நலமில்லாத தலைவர்கள் இருந்திருந்தால் இன்றளவில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், பெருமளவுக்கு அவ்வாறு இருக்கவில்லை. அல்லது ஆளுமைமிக்க தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அல்லது துரோகிகள் என்ற முத்திரையுடன் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இன்றளவும் ஆக்கபூர்வமாகச் செயற்பட முனைபவர்கள் விரும்பத்தகாதவர்களாக ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு சமூகமும் ஒரு முக்கிய காரணி. இந்தச் சமூகமும் துரதிஷ்டவசமாக இந்தப் போக்கிரிகள்ளத்தான் தமது தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கிறது.

பிரச்சினை நீடித்து நிலவினால்தான் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியும். அங்கு, இருப்பவர்களின் விசா, வதிவிட உரிமைகளை உறுதி செய்ய முடியும் என இச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

சொந்த ஊரில் வாழ்வின் இருப்பை உறுதி செய்வது மிக முக்கியமானது.

இங்கு வாழ்வு சீர்குலைந்து போவதே ஐரோப்பாவில் தமது சந்ததிகளுக்கு வாழ்க்கையை உருவாக்குமென இதன் ஆழ்மனம் கருதுகிறது. எனவே, பிரச்சினை தீர்வென்பது இதற்கு கசப்பான விடயம்.

ஆனால், மிகவும் வறிய மக்கள் பிரிவு இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை தலைவிதி இங்குதான். ஆனால், இவர்களும் இந்தச் சீர்குலைவுக் கருத்தியலின் செல்வாக்குக்கு உட்படுகிறார்கள்.

ஆட்சியாளர்களும் அவர்களது பரிவாரங்களும் கூட இனப்பிரச்சனை நீடித்து நிலவுவதையே விரும்புகிறார்கள். அவர்களின் வாக்குவங்கி, அரசியல் இருப்பு எல்லாமே பேரினவாத அரசியல் சார்ந்தது.

எனவே, நாட்டில் பிரிவினையைப் பேசும் அரசியல் எதிரிகள் தேவைப்படுகிறார்கள். அதாவது அனுகூல சத்துருக்கள் தேவைப்படுகிறார்கள்.

அதற்கு இந்த சீர்குலைவு சக்திகள், சமூகப் பிரிவினர் உதவுகிறார்கள். அதுதான் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சக்திகளுக்கு ஜனநாயகம், மனித உரிமை, சமூக பொருளாதார அபிவிருத்தி, முன்னேற்றம் இவை பற்றிய எந்த அக்கறையும் கிடையாது.

எனவே ஆக்கத்திற்கான இயக்கம் ஒன்று தேவைப்படுகிறது.

அது இனங்களின் உரிமைகளையும், சமான்ய மனிதர்களின் சமூக பொருளாதார உரிமைகளையும் ஜனநாயக மனித உரிமைகளையும் முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும்.

இராணுவவாதம், நில ஆக்கிரமிப்பு, கலாசார ஆக்கிரமிப்பு பாரியளவில் நிகழ்கிறது. தமிழ் தேசியம் தன்னுள் இருக்கும் மேட்டுக் குடித்தனம், பிராந்தியவாதம் பற்றி கேள்வி கேட்கத் தயாராக இல்லை.

அது சமூகத்தில் வறியவர்களின் நிலை பற்றி பேசுவதில்லை.

இந்த இருபக்கத்து அரசியல் சித்து விளையாட்டுக்கள் பற்றிய விழிப்புணர்வுக்கான சக்திகள் சமுதாயத்தில் உருவாக வேண்டும்.

முக்கியமான பிரச்சினை என்னவென்றால் மக்கள் சுயாதீனமாக இயக்கங்கள் நடத்துவதற்கான இடைவெளிகள் இங்கில்லை.

அது வெலிவேரியாவிலும், கட்டுநாயக்காவிலும் சிலாபத்திலும், கொழும்பு, ருகுணு பல்கலைகழக போராட்டங்களிலும்,

வடக்கு வலிகாமம். மற்றும் முல்லைத்தீவு மக்களின் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் கூடிநின்று தமது கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

சரி பிழைகளுக்கு அப்பால் விக்கிரமபாகு கருணாரட்ன போன்றவர்கள் லிப்டன் சுற்று வட்டத்திலும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாகவும் தொடர்ந்து பல்வேறு சமூக அரசியல் தொடர்பில் ஆர்ப்பாட்ட இயக்கங்களை நடத்தி வருகிறார்கள்.

1953 ஹர்த்தால், அரிசி விலை உயர்வுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி நடத்திய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டமாகும்.

அதேபோல் 1960 களின் முற்பகுதியில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் அடக்கு முறைகளுக்கு எதிரான சத்தியாக்கிரகப் போராட்டம் முக்கியமானது.

டெல்லியில் ஜந்தர் மந்தர், இராம் விலான் மைதானம், எகிப்தின் தஹ்ரீரின் சதுக்கம், அமெரிக்காவின் வோல் ஸ்ரீட், பிரிட்டனின் ரபகார் சதுக்கம் இவ்வாறு மக்கள் கூடி போராட்டங்களை நடத்தும் இடங்கள் இருக்கின்றன.

மக்களின் கோரிக்கைகள் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான இடைவெளிகள் வேண்டும்.

இலங்கையில் ஜனநாயகம் என்பது மிகவும் கேலிக்குரியது.

பேரினவாத மதவாத, சக்திகள் கோஷம் எழுப்ப அனுமதிப்பார்கள். தொழிலாளர்கள், மாணவர்கள் சிறுபான்மை சமூகங்கள் தமது கோரிக்கைகளை எழுப்பும் போது இரும்புக் கரம் கொண்டு அகற்றுவார்கள்.

இலங்கைக்கு பெருமைமிகு தொழிலாளர் இயக்க போராட்ட வரலாறு இருக்கிறது. அந்த வரலாறு மீட்கப்பட வேண்டும். 1953 ஹர்த்தால் அத்தைகயவொரு எழுச்சி.

மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக வீதிக்கு வருவதற்கான நிலைமைகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். •

# காசா - உலகம் மௌனித்து நிற்க அங்கு சங்காரம் நிகழ்கிறது

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் எந்த அறக் கோட்பாட்டிற்கும் உட்பட்டதல்ல.

சமூகம் ஒன்றை முற்றுமுழுதாக அழித்து விடுவது அல்லது இடையறாத அழிவை ஏற்படுத்துவது என்பது உலக மானிடத்தால் சகித்துக் கொள்ள முடியாததாகும். ஆனால், சகித்துக் கொள்ளப்படுகிறது. அதுதான் அதிர்ச்சியளிக்கிறது.

மனித உரிமைகள் வல்லாதிக்க சக்திகளின் உலகளாவிய பொருளாதார நலன் சார்ந்தே சிந்திக்கப்படுகிறது.

உலகம் மௌனித்து நிற்க அங்கு சங்காரம் நிகழ்கிறது.

காசா மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதல் மனிதகுலத்தின் இருப்பு பாதுகாப்புத் தொடர்பாக உலகத்தின் கரிசனை எந்த லட்சணத்தில் இருக்கின்றதென்பதையே காட்டுகின்றது.

ஒரு மிகச்சிறிய நிலப்பரப்பில் ஏறத்தாழ 350 மீற்றர் பரப்பளவில் வெளியேறுவதற்கு வழியற்ற ஒரு பிரதேசத்தில் பெண்கள், குழந்தைகள், நோயாளர்கள் என்ற பேதமின்றி உயிரிழப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

பூமிப்பந்தின் ஒரு மூலையில் மனிதம் நிர்மூலம் செய்யப்படுவதை கையாலாகாதவர்களாக பார்த்து நிற்பது சகஜமாகிப் போய்விட்டது.

உலகத்தின் சாதாரண வெகுஜனங்கள் கொந்தளிக்கும் அளவிற்கு உலகத் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர்களின் குரல்கள் உறுதியானதாக இல்லை. ஐக்கிய நாடுகள் சபை தனது இயலாமையை வெளிப்படுத்தி நிற்கிறது.

இத்தனைக்கும் யூத சமூகம் மனிதகுல வரலாறு கண்டிராத பேரழிவை கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டிருந்தது.



அடிப்படைவாதக் குழுக்கள் எதுவும் நியாயப்படுத்த முடியாதவை. ஒரு மக்கள் கூட்டத்தின் இருப்பை நிராகரிப்பது உலக வரைபடத்தில் அவர்களை இல்லாமல் செய்வதும் இந்த, கடந்த நூற்றாண்டுகளின் அவக்கேடாகும்

ஹமாஸ் காசா மக்களின் இருப்பு வாழ்வு பற்றிய எந்த ஆக்கபூர்வமான கரிசனையும் இல்லாத அடிப்படைவாத அமைப்பு. அது தனது பயங்கரவாதச் செயல்கள் எத்தகைய பிரதிவிளைவுகளை ஏற்படுத்தும் என்ற அக்கறை கொண்டதல்ல.

காசா மக்கள் அதனை ஒரேயடியாக ஆதரிக்கிறார்கள் என்றுமில்லை.

இஸ்ரேலிய சியோனிச ஆட்சியாளர்கள் பொதுமக்கள் மீது தாக்குவதற்கு, ஹமாஸ் வழிசமைத்துக் கொடுத்திருக்கிறது. காசா மக்கள் அதற்கான விலையை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் காசாப் பகுதிக்கு அவசர உதவிகளை எடுத்துச் சென்ற கப்பல் தாக்கப்பட்டது. இவர்கள் மனிதப் பண்பினரா என்ற கேள்வி திரும்பத் திரும்ப எழுகிறது. இவ்வளவுதான் மனிதப்பண்பு என்றால் ஐ.நாவும் வேறு உலகசபைகளும் மனித உரிமை அமைப்புகளும் எதற்காக?

இப்போதே நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து விட்டார்கள். இந்தத் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சகிப்புத்தன்மை, சகவாழ்வு இன்று மத்திய கிழக்குக்குத் தேவைப்படுகிறது.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக பாலஸ்தீனர்கள் தமது இருப்புக்காகச் சிந்திய இரத்தம் கொஞ்சநஞ்சமல்ல.

அவர்கள் வாழ வேண்டும். உலகின் வேறு பகுதிகளில் சுதந்திரமாக வாழும் மக்கள் போல் அவர்களும் வாழ வேண்டும்.

மரணமடைந்த குழந்தைகளின் சடலங்களை அடுக்கி வைத்து பார்க்கும் குரூரம் வேண்டாம். இது எதிர்கால வாழ்வின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனம் ! பேரழிவு !!

இதனை செய்யும் சியோனிச ஆட்சியாளர்களை விட இதனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் உலகம் அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது.

இந்த மாபாதகத் தாக்குதல் மனித குலத்தின் சகல வலுக்களைக் கொண்டும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

காந்தியும் மண்டேலாவும் உலகுக்கு காட்டிய வழிகள் இருக்கின்றன. உலகில் ஆக்கிரமிப்பாளர்கள் மேலாதிக்க வெறி சக்திகள் அடிப்படைவாத குழுக்களை மனித குலம் எந்தவழியில் எதிர்த்துப் போராட வேண்டும் என்பதை இவர்கள் உலகுக்கு உணர்த்திச் சென்றார்கள்.

ஈவிரக்கமற்ற நுகர்வு கலாச்சாரம் சர்வதேச சகோதரத்துவத்தைத் தகர்த்து விட்டதா என்று எண்ண வைக்கிறது.

வியட்நாம் மக்களின் அவலம் சாதாரண அமெரிக்க மக்களின் கண்களை திறந்தது. அமெரிக்கப் படையணிகள் 1970 களின் நடுப்பகுதியில் வியட்நாமை விட்டு வெளியேறுவதற்கு அதுவொரு காரணியாக அமைந்தது.

மேற்கு நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் இந்தியாவிலும் காசா மக்களுக்கு ஆதரவான தார்மீக குரல்கள் ஓங்கி ஒலிக்கவே செய்கின்றன. இது பாலஸ்தீன மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு வழிசமைக்க வேண்டும்.

உலகில் வாழ்வுக்கும் மரணத்துக்குமிடையே வாழும் மக்களின் மனங்களில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான உலக நீதி வேண்டும். அது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு வழிசமைக்க வேண்டும். உலகளாவிய மானிட நீதிக்கான அறப் போராட்டம் தொடர வேண்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தோழர் தைரி

## தமிழ் இனத்தின் அரசியல், ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில்
## தம் உயிரை அர்ப்பணித்த தோழர்களை
# நினைவு கூருவோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து ஆகஸ்ட் மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள்.
அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது, அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை
**முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்.**

| பெயர் | தோழர் | இற.திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| தைரியராஜா (தைரி) | நாகேஸ் | 11.08.1987 | நற்பிட்டிமுனை | புலிகள் |
| என்.பகீரதன் | பகீரதன் | 24.08.1984 | கல்முனை | எஸ்.ரி.எவ் |
| ரி.தெய்வீகராஜா | மோகன் | 24.08.1984 | சேனைக்குடியிருப்பு | எஸ்.ரி.எவ் |
| எஸ்.விவேகானந்தராஜா | ரஞ்சன் | 24.08.1985 | தம்பிலுவில் | எஸ்.ரி.எவ் |
| சிவநேசமூர்த்தி | சதா | 24.08.1985 | தம்பிலுவில் | எஸ்.ரி.எவ் |
| கே.சவுந்தரராஜன் | ரவி | 24.08.1985 | தம்பிலுவில் | எஸ்.ரி.எவ் |
| பி.நடேசமூர்த்தி | மோசஸ் | 20.08.1987 | பளுகாமம் | புலிகள் |
| எஸ்.நித்தியானந்தன் | சனனி. | 01.08.1987 | தேத்தாதீவு | புலிகள் |
| | அலெக்ஸ் | 25.08.1988 | மகிழூர் | புலிகள் |
| ஜேசுதாஸ் | ஜெயா | 13.08.1985 | முகத்துவாரம் | |
| இ.சுகுமார் | சுகுமார் | 17.08.1987 | களுவாஞ்சிக்குடி | |
| ஜே.ஞானப்பிரகாசம் | விஜி | 20.08.1990 | அம்பலாந்துறை | |
| சீ.யோகராசா | ரஞ்சி | 01.08.2004 | மண்டூர் | |
| | பாபு | 04.08.1988 | வவுனியா | புளொட் |
| கதிர்காமநாதன் | தயாளன் | 20.08.1986 | சுழிபுரம் | விபத்து |
| க.இராஜேந்திரன் | குமார் | 21.08.1986 | பருத்தித்துறை | இராணுவம் |
| த.பத்மநாதன் | சங்கர் | 21.08.1986 | கண்டி | இராணுவம் |

| பெயர் | தோழர் | இற.திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| | இமாம் | 10.08.1989 | அச்சுவேலி | புலிகள் |
| | ரூபன் | 07.08.1989 | நீர்வேலி | புலிகள் |
| | பத்மன் | 06.08.1989 | ஆவரங்கால் | புலிகள் |
| அ.கிறிஸ்ரியன் | பீற்றர் | 12.08.1989 | | புலிகள் |
| சி.ஏ.சி.குலரட்ணம் | குலம் | 16.08.1988 | பலாலி | ஐ.பி.கே.எவ் |

தமிழ பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று வருடந்தோறும் இம் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எகம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம் இங்கு நினைவு கூரப்பட்ட தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கு அவர்களது படங்கள் அவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு அனுப்பி உதவுமாறு தோழர்கள் அன்பர்கள் நண்பர்கள் குடும்பத்தவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இங்கு இடம்பெறத் தவறிய தோழர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் படங்களை வைத்திருப்பவர்கள் அவற்றையும் எமக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றோம்.

# தியாகிகள் தினம் 2014

## அஞ்சலி நிகழ்வுகள்




























## வெலிக்கடையில் கொல்லப்பட்டவர்களுக்காக

ஈபிஆர்எல்எவ் மத்திய குழு உறுப்பினர் தோழர் பாஸ்கரன், தோழர் தேவகுமார் உட்பட வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 பேரின் நினைவாக..


தெ.பாஸ்கரன்


பொ.தேவகுமார்


டாக்டர் இராஜசுந்தரம்


தங்கத்துரை


குட்டிமணி


ஜெகன்

முதலாம் நாள் 25 ஜூலை 1983 படுகொலை செய்யப்பட்டவர்கள்

1 நடராசா தங்கவேல் (தங்கத்துரை)
2 செல்வராசா யோகச்சந்திரன் (குட்டிமணி)
3 கணோசானந்தன் ஜெகநாதன் (ஜெகன்)
4 செல்லத்துரை சிவசுப்பிரமணியம் (தேவன்)
5 நவரத்தினம் சிவபாதம் (சிவபாதம் மாஸ்டர்)
6 வைத்திலிங்கம் நடேசுதாசன் (செனட்டர்)
7 செல்லத்துரை ஜெயரட்ணம் (சின்னராஜா)
8 சிவநாயகம் அன்பழகன் (அன்ரன்)
9 அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம் (ராசன்)
10 காசிப்பிள்ளை சுரேஷ்குமார் (சுரேஷ் மாஸ்டர்)
11 சின்னத்துரை அருந்தவராஜா
12 தனபாலசிங்கம் தேவகுமார் (அரபாத், தேவன்)
13 மயில்வாகனம் சின்னையா
14 சித்திரவேல் சிவானந்தராஜா
15 கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
16 தம்பு கந்தையா
17 சின்னப்பு உதயசீலன்
18 கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன் (கணேஷ்)
19 கிருஷ்ணபிள்ளை நாகராஜா
20 கணபதி கணேசலிங்கம் (கணேஷ்)
21 அம்பலம் சுதாகரன்
22 இராமலிங்கம் பாலச்சந்திரன்
23 பசுபதி மகேந்திரன்
24 காசிநாதன் தில்லைநாதன் (கண்ணன்)
25 செல்லப்பா குலராஜசேகரம் (குலம்)
26 குமாரசாமி உதயகுமார் (மோகன்)
27 சுப்பிரமணியம் சிவகுமார் (ராஜன்)
28 கோதண்டபிள்ளை தவராஜசிங்கம்
29 கருப்பையா கிருஷ்ணகுமார் (கொழும்பான்)
30 ராஜயோகநாதன் (யோகன்)
31 ஞானசேகரன் அமிர்தலிங்கம் (அமுதன்)
32 அந்தோனிப்பிள்ளை உதயகுமார்
33 அழகராஜா ராஜன்
34 வேலுப்பிள்ளை சந்திரகுமார்
35 சிற்றம்பலம் சாந்தகுமார் (சாந்தன்)

இரண்டாம் நாள் 27 ஜூலை 1983 படுகொலை செய்யப்பட்டவர்கள்

1 தெய்வநாயகம் பாஸ்கரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்)
2 பொன்னம்பலம் தேவகுமார் (ஈ.பி.ஆர்.எல்.எவ்)
3 பொன்னையா துரைராஜா
4 முத்துக்குமார் ஸ்ரீகுமார்
5 அமிர்தநாயகம் பிலிப் குமாரகுலசிங்கம்
6 செல்லச்சாமி குமார்
7 கந்தசாமி சர்வேஸ்வரன்
8 அரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
9 சிவபாலன் நீதிராஜா
10 ஞானமுத்து நவரட்ணசிங்கம்
11 கந்தையா ராஜேந்திரம்
12 டாக்டர் ராஜசுந்தரம்
13 சோமசுந்தரம் மனோரஞ்சன்
14 ஆறுமுகம் செயோன்
15 தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன்
16 சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்
17 செல்லப்பா இராஜரட்ணம்
18 குமாரசாமி கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பார்ந்த நண்பர்களே! ஆற்றல் மிகு தோழர்களே!!

அ.வரதராஜப்பெருமாள்

# வலுவிழந்து வரும் நியாயங்கள்

மிகப் பெரும்பான்மையான வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது வாக்குகளை வாரி அள்ளி வழங்கி நாடாளுமன்றத்துக்கும் மாகாண சபைகளுக்கும் தெரிவு செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மாகாண சபைகள் தொடர்பாகவும் அதற்கான அதிகாரப் பகிர்வுகள் தொடர்பாகவும் மிகவும் தெளிவாகவும் உறுதியான முடிவுகளோடும் இருக்கிறார்கள் என்பது இப்போது தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றே நினைக்கிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதிலுள்ள பெரிய கட்சியான தமிழரசுக்



கட்சியின் தலைவருமான திரு இரா.சம்பந்தன் அவர்கள் எப்போதுமே தமிழர்களின் கேள்விகளுக்கு எங்கேயுமே தெளிவான வெளிப்படையான பதிலெதுவும் அளிப்பதில்லை. தாங்கள் தேவையான சகல கருமங்களையும் தமிழ் மக்களுக்காக அந்தரங்கத்தில் ஆற்றி வருவது போலவும் அது ஒரு ராஜரகசியம் போலவும் எதனையும் யாருக்கும் புரியாமல் பேசுவது அவரது வழக்கம்.

அஃது எப்படியாயினும் திரு. பிரேமச்சந்திரன் அவர்கள் அண்மையில் தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பான ஆலோசனைகளை, பிரேரணைகளை தமக்கு எழுதி அனுப்பும்படி ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் கோரியதைப் பலரும் அறிவீர்கள்.

அது எதனைக் காட்டுகிறதென்றால் இது காலவரை தமிழர்களுக்கு குறைந்த பட்சம் எப்படிப்பட்டதொரு நியாயமான அரசியற் தீர்வு வேண்டும் என்பது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்தவொரு கொள்கைத் திட்டத்தையும் கொண்டவர்களாக இருக்கவில்லை என்பதையே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எந்த வித கொள்கையும் இல்லை அரசியற் தீர்வுக்கான திட்டம் எதுவும் கிடையாது தோதல்களில் மக்களின் வாக்குகளைக் கொள்ளை அடிப்பதற்காகாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதுவும் சொல்வார்கள் என்னமும் செய்வார்கள் என்பதையே சுரேஷ் பிரேமச்சந்திரன் மறைமுகமாக எல்லோருக்கும் தெரிய வைத்திருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டுதல் வேண்டும்.

திரு. சேனாதிராஜா அவர்கள் அடிக்கடி 13வது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்களுக்கான ஒரு முழுமையான தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறினாலும் அதன் அடிப்படையில் அமைந்த வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் ஆகிவிட வேண்டும் என்று கடுமையாக முயற்சித்தவர்.

அதே போலவே சுமந்திரனும் அவ்வப்போது கூறினாலும் திரு. விக்கினேஸ்வரன் அவர்களை முதலமைச்சராக ஆக்குவதற்காக சம்பந்தரோடு இணைந்து கடுமைாக உழைத்தவர்.

எனவே, திரு. சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் போன்றவர்கள் 13வது திருத்தம் திருப்தியற்றது என என்னதான் கூறினாலும் - அவர்கள் ஓர் உயர்ந்தபட்ச அரசியற் தீர்வையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதினாலும் இப்போதைக்கு அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் வழியாக அமைந்துள்ள மாகாண சபைகளை தமிழ் மக்களுக்கு தற்காலிகமாகவேனும் பயனுடையதாக ஆக்கிட முயல்வார்கள் என்றே எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால், தமிழரசுக் கட்சியின் உப தலைவரும் யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியருமான திரு. சிற்றம்பலம் அவர்கள் இப்போது 13வது திருத்த ஏற்பாடு தொடர்பாக தமிழரசுக் கட்சி ஒட்டு மொத்தத்தில் எப்படியான ஒரு நிலைப் பாட்டைக் கொண்டுள்ளது என்பதனை எந்தவித சந்தேகத்துக்கும் இடமின்றி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தாங்கள் 13வது திருத்தத்தை எந்த வகையிலும் என்ன காரணத்துக்காகவும் ஏற்கவேயில்லை என உறுதியாகக் கூறியிருக்கிறார். அதனது அர்த்தம் இந்த மாகாண சபை அமைப்பு முறையை அவர்கள் சற்றும் ஏற்கவில்லை என்பதுதானே!

இந்த மாகாண சபை அமைப்பு மூலம் மக்களுக்கு நன்மை செய்யவோ அல்லது அரசியல் முன்னேற்றத்துக்கான படிக் கல்லாக அல்லது ஊன்று கோலாக இந்த மாகாணசபை முறையைப் பயன்படுத்திக் கொள்ளவோ போவதில்லை என்பது தானே பேராசிரியர் சிற்றம்பலத்தின் உறுதியான கருத்து.

இந்தக் கருத்தினையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் எல்லா இடங்களிலும் மிகவும் உரத்த குரலில் கூறிவருகின்றார்.

பொதுவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனிப்பட்டரீதியில் சந்திப்பவர்களிடம் சொல்லும் கருத்து என்னவெனில், இந்த மாகாணசபை அமைப்பு முறையைப் பயன்படுத்தி மஹிந்த அரசாங்கமும் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே மாகாண சபைக்கான தேர்தலில் பங்குபற்றி அதன் ஆட்சியைக் கைப்பற்றி அதனை எதற்கும் யாருக்கும் பிரயோசனப்படாமல் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்பது தான்.

பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் பெரும்பாலும் தேர்தல்களில் வேட்பாளராக பங்கு பற்றாதவர் என்றாலும், அவர் பங்குபற்றிய தேர்தல்களில் வெற்றி பெறாவிட்டாலும் அவர் யாழ்ப்பாண மக்களின் அரசியற் சிந்தனையை, முடிவுகளை நிர்ணயிக்கின்ற பெருங்குடிப் பிரமுகர்களிற் பிரதானமான ஒருவராவார். அவரின் கூற்று யாழ்ப்பாணத்தின் செல்வாக்கு மிக்க அரசியற் சிந்தனையையே பிரதிபலிக்கின்றது என்பதிற் சந்தேகமில்லை.


பதவி மற்றும் அதிகாரங்கள் வகையாக நான் இப்போது ஒரு பொருட்டல்லாத ஆளாக இருப்பினும் இலங்கை தொடர்பான இந்திய அரசின் துறைகளோடு எனக்கு இப்போதும் உள்ள தொடர்பு பலராலும் புரிந்து கொள்ளப்படக் கூடிய ஒரு விடயமே, குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் பலரும் அறிந்த விடயமாகும். அந்த வகையில் எனக்குத் தெரிந்தது என்னவெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு இந்திய அரசு பல்வேறு அங்கீகாரத்தையும் ஆதரவுகளையும் வழங்கி வருகிறபோதிலும் இவர்கள் எந்தவொரு அரசியற் தீர்வையும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் முன் வைத்து செயற்படாதமையானது இந்திய அரச மட்டத்தில் ஓர் அதிருப்தி நீண்ட காலமாகவே காணப்படுகிறது.

13வது அரசியல் யாப்புத் திருத்தத்திலுள்ள விடயங்கள், சந்திரிகா பண்டார நாயக்கா மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றவர்கள் முன்வைத்த அரசியற் தீர்வுத்திட்டங்கள் மேலும் கடந்த காலங்களில் தமிழர்களுக்கான தீர்வு தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகள் போன்றவற்றையெல்லாம் கருத்தில் எடுத்து அவற்றைச் சுட்டிக்காட்டி விரிவானதோர் அரசியற்தீர்வுப் பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திட்டவட்டமாக எழுத்து வடிவில் முன்வைக்க வேண்டும் என்றே இந்திய அரசு கருதுகிறது என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

அந்த அடிப்படையிலேயே தமிழர்களின் அபிலாஷைகளுக்கான தீர்வை முன்னெடுக்க வேண்டும் என இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தற் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைத்த தேர்தல் அறிக்கை தொடர்பாகவும், தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்ட பிரசாரம், மேலும் இதுவரை வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்திவரும் முறை எதுவுமே இந்திய அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெறுகின்ற வகையாக இல்லை என்பதை நான் நன்கு அறிவேன்.

முக்கியமான உலகநாடுகள் பலவற்றின் உயர் அதிகாரிகள் தமிழர்களின் பிரச்சினைகளை நேரடியாக அறிய அடிக்கடி யாழ்ப்பாணத்துக்குத் தேடிச் சென்று முதலமைச்சரைச் சந்திக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விலாவாரியாக தமிழர்களின் பிரச்சினைகளை விளக்குவதாக முதலமைச்சரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் திருப்தி கொள்ளலாம். ஆனால், அந்த நாடுகளும் மிக விரைவில் இந்த முதலமைச்சரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் திரும்பிக்கூடப்



பார்க்காமல் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் புரிந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

2002ம் ஆண்டுக்கும் 2004ம் ஆண்டுக்கும் இடையில் இதைவிடப் பெரிய, பெரிய உலக அதிகாரிகளெல்லாம் வன்னிக்குத் தேடிப் போய் பிரபாகரனைச் சந்தித்ததை இவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். கடைசியாக அந்தப் பிரபாகரனைக் காப்பாற்ற யாரும் வரவில்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

13வது அரசியற் திருத்தம் ஒரு கரடு முரடான பாதைதான். ஆனால், அதனைத் தவிர்த்து வேறெந்தப் பாதையும் இப்போதைக்கு தமிழர்களுக்கு இல்லை. அதற்கூடாக எவ்வாறு முன்செல்வது என்பதை மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தான் கண்டுபிடித்துச் செயற்பட வேண்டும்.

"13வது திருத்தம் வேண்டாம்", "அதை நாங்கள் ஏற்கவில்லை" சமஷ்டி ஒன்றைத் தவிர வேறெதையும் ஏற்க மாட்டோம் என்று சூளுரைக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதனாற் கிடைக்கும் தனிப்பட்ட நன்மைகளையெல்லாம் ஒன்றைக் கூட விட்டு விடாமல் பெற்றுக் கொள்வதற்குக் காட்டும் அக்கறையைப் பார்க்கும் மஹிந்தவும் அவரது சகோதரர்களும், சிங்கள, அரச உயர் அதிகாரிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் மாவீரத் தனத்தையும் சுயமரியாதையையும் என்ன கணக்கில் வைத்து எடை போடுவார்கள் என்று கற்பனை பண்ணிப் பார்க்கவே வெட்கமாக இருக்கின்றது.

பிரபாகரன் இருந்த போது இவர்களுக்கு ஆயிரம் பொன் பிரபாகரன் இறந்த பின்னும் இவர்களுக்கு ஆயிரம் பொன்

ஆனால், பிரபாகரன் இருந்த போது தமிழர்களுக்கு அழிவு மட்டுமே

பிரபாகரனால் உருவாக்கப்பட்ட இவர்களாலும் தமிழர்களுக்கு எந்த விமோசனமும் இல்லை ●



## ஊடகங்கள்



இந்தியாவில் இது நான்காவது தூண் எனப்படுகிறது. இந்திய மக்களைப் பாதிக்கும் பல விடயங்கள் இங்கு கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன, விவாதிக்கப்படுகின்றன.

நலிவுற்ற சமூகப் பிரிவினர் மீதான பாலியல் வன்கொடுமைகள் பால் சமத்துவம், தலித்துக்கள் ஆதிவாசிகள் மீதான ஒடுக்கு முறைகள், மதச்சார்பின்மை பாதுகாப்புப் படைகளுக்கு விசேட சட்டங்கள், மூன்றாம் பால் இனத்தாரின் உரிமைகள். உச்சபட்ச தண்டனை வழங்குவது இந்தியர்களின் 50 வீதத்துக்கு மேற்பட்டோரின் சுகாதாரம் கல்வி பற்றியெல்லாம் விவாதிக்கப்படுகின்றன. விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றன.

ஆனால், இலங்கையில் இதற்கான இடைவெளி அரிதிலும் அரிது.

இராணுவவாத சிந்தனை, சமூகத்தை கட்டுப்படுத்தி அடக்கி வைத்திருக்கும் சிந்தனைப் போக்கு அதிகரித்து வருகிறது.

மத மோதல்கள் உட்பட அத்தனை காரியங்களும் நிகழ்கின்றன.

எனவே, ஜனநாயகத்துக்கான சீர்திருத்தங்கள் அதிகார மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊடக சுதந்திரம் உண்மையான அர்த்தத்தில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆனால், ஊடகங்கள் அதன் முதலாளிகளுக்கு காப்ரேட்டுக்களின் நலன்களை முன்னிறுத்தியே செயற்படுகின்றன.

ஆனால், அதை அம்பலப்படுத்தும் ஊடகங்களும் இருக்கவே செய்கின்றன.

பல விடயங்களை கேள்விக்குள்ளாக்கும் கிழித்துப்போடும் ஊடகங்கள் உள்ளன.

எந்த தன்னலமும் இல்லாத ஊடகவியலாளர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் முன்னாள் திருடர்களும் ஊடகவியலாளர்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் சொல்வதை நம்புவதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது.

எமது மக்கள் இதிலிருந்து விடுபடுவதற்கு உப கண்ட அளவில், உலகளவில் ஊடகங்களை அவதானிக்க வேண்டும்.

சமூக வலைதளங்களில் ஈடுபாடு செலுத்த வேண்டும். அப்போதுதான் உலகம் எவ்வாறு நாம் எவ்வாறு என்பது புரியும்.

இலங்கையின் அதிகார மட்ட சீர்திருத்தம் சகல அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதிலிருந்து அவசரகால-பயங்கரவாதத் தடைச்சட்டங்களை நீக்குவதிலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும். விடயங்கள் இங்கிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்கு இனபேதம் கடந்து சமூக அரசியல் சக்திகள் செயற்பட முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம், அவர்களால் இல 781, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.